முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 837

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.01.2022, வியாழக்கிழமை

1. தவயோகம் கொண்ட ஆறுமுக அரங்கனே
   தரணிகாக்க வேண்டி மகா அவதாரம் புரிந்த
   புவனம் வெல்லும் கந்தவேலன் என் சூட்சுமமே
   புண்ணியனே ஆறுமுகத்தின் மகா ஞான சூட்சும வடிவே
2. வடிவேலனாக வரம்பெற்று வந்த
   வள்ளலே வாழுகின்ற ஞானியே அரங்கனே
   நாடியே சுப்பன் யான் உந்தனோடு ஞானமாக
   ஞானஆட்சிக்காலம் உருவாக வேண்டி
3. வேண்டியே அற்புதம் நிகழ்த்திவர
   வேலவன் யானும் உந்தனுக்கு
   ஞான அறிவுரை ஆசி
   காலமதில் பிலவ சிலை திங்களில்
   (பிலவ வருடம் மார்கழி மாதம் 29ம் நாள், 13.01.2022 வியாழக்கிழமை)
   கண்டுரைப்பேன் அரங்கன் நீ கேட்க
4. கேட்கவே அரங்கன் தர்மம் உலகை வெல்லும்
   கேட்டு அரங்கன் சன்மார்க்கத்தை பின்பற்றும் மக்கள் மூலம்
   மாட்சிமைபட ஞான ஆட்சி உலகில் மலரும்
   மகத்துவம்பட அரங்கனை ஏற்று வரும் மக்களுக்கு மரணமும் மறுமையும் விலகி ஓடும்
5. ஓடுமப்பா தர்மஞான பலத்தினால்
   ஓடுமப்பா கர்மவினைகள் அனைத்தும்
   ஓங்கார சக்தியால் விலகி ஓடி
   ஓங்காரன் ஆசிபட வரும் மக்களெல்லாம்
6. உயர்வான ஞான சூட்சும பலம்பெற்று
   பலமான வாழ்வும் வளமான பொருளாதார சைளகர்யமும்
   வளமான இல்லறமும் வாரிசு வம்ச விருத்தி என
   வல்லமை பல பெற்று
7. பெற்றுமே பதினாறு வகையான செல்வங்களோடு
   பிசகில்லாத பெரும்பேறுங்கண்டு திளைக்க நேரும்
   ஆற்றல்பட இந்தவித நன்நாளில்
   அரங்கனை காணும் மக்களுக்கு

8. அற்புதம் நடக்கும் நடக்கும்
ஏற்று அரங்கன் திருவடி பணிந்தவர்க்கு
எல்லாம் இலகுவாக சித்திக்கும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

பெரியோர்கள் திருமண தம்பதியினரை வாழ்த்தும்போது 16வகை செல்வமும் பெற்று நீடூழி வாழ்க எனவாழ்த்துவார்கள் அந்த 16 வகையான செல்வங்களையும் சுருக்கமாக இங்கே எழுதியுள்ளோம்.

1. கல்வி– ஒரு மனிதனுக்கு கல்வி அவசியம்.

*கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு*
*மாடுஅல்ல மற்றை யவை.*
*-திருக்குறள்-கல்வி குறள் எண் 400.*

2. புகழ்– கல்வி செல்வத்தால் ஒருவனுக்கு புகழ்பட வாழும் வாய்ப்பு உண்டாகும்.

*நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்*
*போற்றாது புத்தேள் உலகு.*
*-திருக்குறள்-புகழ்- குறள் எண் 234.*

3. வலிமை–மனிதனுக்கு உடல்பலம் வேண்டும்.

*பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்*
*சால மிகுத்துப் பெயின்.*
*-திருக்குறள்-வலியறிதல் -குறள் எண் 475.*

4. வெற்றி–வாழ்வில் மனிதனுக்கு தோல்வி என்ற பேச்சே இருக்க கூடாது தொடர்ந்து வெற்றி அடைந்திட வேண்டும்.

*என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை*
*முன்நின்று கல்நின் றவர்.*
*-திருக்குறள்-படைச்செருக்கு- குறள் எண் 771.*

5. நன் மக்கள்–பண்புள்ள மக்கட் செல்வம் அமைந்திட வேண்டும்.

*பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த*
*மக்கட்பேறு அல்ல பிற.*
*-திருக்குறள்-மக்கட்பேறு குறள் எண் 61.*

6. பொன்–மனிதனின் வாழ்விற்கு தேவையான பொன்னும் பொருளும் வேண்டும்.

*செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
*எஃகதனிற் கூரிய தில்.*
*-திருக்குறள்-பொருள்செயல்வகை- குறள் எண் 759.*

**7.** நெல்–ஒரு மனிதனுக்கு தேவையான உணவை அளிக்கும் நல்ல விளை நிலங்கள் வேண்டும்.

*உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்*

*-திருக்குறள்-உழவு-குறள் எண் 1033.*

**8.**நல் விதி–ஒருமனிதனுக்கு புண்ணியத்தால் உண்டாகும் நல்விதி வேண்டும், ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் செய்வதாலும் முருகப்பெருமானை பூஜிப்பதாலும் புண்ணியபலமும் அருள்பலமும் பெருகி நல்விதியாகிய நல்வினை உண்டாகும்.

*நன்மார்க்கமே சன்மார்க்கம்.*

**9.** நுகர்ச்சி–உயர்ந்த அறுசுவை உணவுகளை உண்டு ரசிக்கும்படியான நல்ல சூழ்நிலை வேண்டும்.

*வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி*
*தொகுத்தார்க்கு துய்த்தல் அரிது.*

*-திருக்குறள்-ஊழ்-குறள் எண் 377.*

**10.** அறிவு–ஒரு மனிதனுக்கு அறம், பொருள், இன்பம், வீடுபேறாகிய நான்கையும் அறிந்து தெளியும் நல்லறிவு வேண்டும்.

*சென்ற இடத்தால் செல்விடா தீதொரீஇ*
*நன்றின்பால் உய்ப்ப தறிவு.*

*-திருக்குறள்-அறிவுடைமை-குறள் எண் 422.*

**11.** அழகு–ஒரு மனிதனுக்கு நல்ல தோற்றப்பொலிவு இருக்க வேண்டும். முருகப்பெருமானை பூஜித்து ஆசி பெற்ற மக்களுக்கு நல்ல தோற்றம் பொலிவாகிய அழகு உண்டாகும்.

*முருகப்பெருமான் ஆசியே அழகு தரும்.*

**12.** பெருமை–ஒரு மனிதன் பெருமைபட வாழ்தல் வேண்டும். நல்ல முறையில் பொருளை ஈட்டி அந்த பொருளை பசித்த ஏழைகளுக்கு பசியாற்றுவித்து அன்னதானம் செய்தால்தான் பெருமை உண்டாகும்.

*அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்*
*பெருமை முயற்சி தரும்.*

*-திருக்குறள்-ஆள்வினையுடைமை- குறள் எண் 611.*

**13.** இளமை–ஒருமனிதனுக்கு நல்ல இளமை வேண்டும். என்றும் மாறா இளமை உடைய அழிவற்ற முருகப்பெருமான் ஆசியால் ஒருவனுக்கு இளமையும் ஆயுள் பெருக்கமும் உண்டாகும்.

*என்றே என்னினும் இளமையோடு இருக்க*
*நன்றே தரும்ஒரு ஞானமா மருந்தே...*

*-அகவல் "மருந்து".*

முருகன் அருளே இளமை தரும்

**14.** துணிவு–ஒரு மனிதன் துணிவு உடையவனாக இருக்க வேண்டும். புண்ணிய பலமும் அருள் பலமும் உடைய மக்களுக்கு துணிவு உண்டாகும்.

முருகப்பெருமான் திருவடியை பூசித்த மக்களுக்கு அருள்பலமும், புண்ணிய பலமும், மனமுவந்து அன்னதானம் செய்யும் மக்களுக்கு துணிச்சல், அச்சமில்லா வாழ்வு வரும்.

**15.** நோயின்மை–மனிதன் நோயற்றவனாக வாழவேண்டும்.

*நோய்எல்லாம் நோய்செய்தார் மேலவாம்; நோய்செய்யார்*
*நோயின்மை வேண்டு பவர்.*

*- திருக்குறள் - இன்னா செய்யாமை - குறள் எண் 320.*

பிற உயிர்களுக்கு செய்கின்ற துன்பமே நமக்கு நோயாக மாறும் ஆகவே நோயற்ற வாழ்வை வாழ விரும்பினால் பிற உயிர்களுக்கு துன்பம் செய்யக்கூடாது.

**16.** வாழ்நாள்–ஒருமனிதன் தனது வாழ்நாளை மகிழ்வுடன் வாழ வேண்டும் புண்ணிய பலமும் அருள் பலமும் உள்ள மக்களுக்கு ஒவ்வொரு நாளும் பொன் நாட்களே.

*வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்*
*வாழ்நாள் வழியடைக்கும் கல்.*

*-திருக்குறள் - அறன் வலியுறுத்தல்- குறள் எண் 38.*

உலக ஞானத் தலைவன் முருகப்பெருமானின் திருவடியை பூஜிக்கின்ற மக்களுக்கே யோகமும், தவமும், ஞானமும் சித்திக்கும். அவர்களே மரணமில்லா பெருவாழ்வை பெறுவார்கள்.

‘பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க’ என்று பெரியவர்கள் வாழ்த்துவார்கள். இதற்கு எங்கள் சிற்றறிவுக்கு தெரிந்த வரையில் விளக்கம் கூறியுள்ளோம். குற்றம் இருப்பது இயல்பே. கற்றறிந்த பெரியவர்கள் குற்றம் இருப்பின் பொறுத்துக் கொள்ளும்படி திருவடி பணிந்து வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.